# பொதுப்பணித்துறை
# மானிய கோரிக்கை எண். 39
# கட்டடங்கள்
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2010–2011
## முன்னுரை

அரசுத் துறைகளில் மிகவும் தொன்மை வாய்ந்ததொரு துறையான பொதுப்பணித்துறை, தனது 150ஆம் ஆண்டை 2008ஆம் ஆண்டில் கொண்டாடியது. கடந்த பல ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற சிறப்புத் திறனின் அடிப்படையில், இத்துறை பல்வேறு அரசுக் கட்டடங்களையும் பாசன கட்டுமானங்களையும் உருவாக்கியுள்ளது.

தமிழர்கள், நகர்புற நாகரிகத்தின் கட்டடக் கலைஞர்கள், என வரலாறு சான்றுரைத்துள்ளது. நமது பொறியியல் திறனுக்கு கல்லணையும், தஞ்சை பெரிய கோயிலும் சான்றாகத் திகழ்கின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட கல்லணை மணற்பாங்கான பகுதியில் அணை கட்டும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதில் உலகத்துக்கே முன்னோடியாக அமைந்துள்ளது. 216 அடி உயர கோபுரமும் அதன்மேல் 80 டன் எடையும் கொண்ட விமானத்துடன், தஞ்சை பெரிய கோயில் தனது 1000–வது ஆண்டை நிறைவு செய்துள்ளது.

இத்தகைய புகழ்பெற்ற பாரம்பரிய கட்டடக்கலை மற்றும் தொழில்நுட்பத்துடன் பசுமைக் கட்டடங்களுக்கான நவீன கோட்பாடுகளை ஒருங்கிணைத்து **‘புதிய சட்டப் பேரவை கட்டடம்’** கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் உச்சியில் 800 டன் எடை கொண்ட திராவிட கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் குவிமாடம் (Dome) அலங்கரிக்கும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன், செம்மொழித் தமிழுக்காக மதுரையில் சங்கம் அமைத்த நமது முன்னோர்களின் வழித் தடத்தைப் பின்பற்றி பொதுப்பணித் துறையினால் சென்னையில் கட்டப்பட்டுவரும் **‘அண்ணா நூற்றாண்டு நூலகம்’**, நவீன இலக்கியம் மற்றும் அறிவியல் தமிழை வளர்க்க ஊக்கமளிக்கும்.

தமிழகத்தின் தலைநகரான சென்னைக்கு மேலும் எழில் சேர்க்கும் வகையில் இவ்விரண்டு கட்டடங்களை அடையாளச் சின்னங்களாக அமைத்தும் விழுப்புரம் மற்றும் திருவாரூரில் புதிய மருத்துவக் கல்லூரிக் கட்டடங்களையும் அளிப்பதில் பொதுப்பணித்துறை கட்டட அமைப்பு மிகுந்த பெருமை அடைகிறது.

## 1.0 பொது

பொதுப்பணித்துறையின் கட்டட அமைப்பு பள்ளிக் கல்வி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம், (நீதிமன்றங்கள், போக்குவரத்து, சிறைச்சாலைகள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் உள்ளிட்ட) உள்துறை, வருவாய், வேளாண்மை, கால்நடை, பால்வளம் மற்றும் மீன்வளம், சுற்றுலா மற்றும் பண்பாடு, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு, சமூக நலம் போன்ற பல்வேறு அரசுத்துறைகளின் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

நவீன தொழில்நுட்பம் மற்றும் கடந்த பல ஆண்டுகளில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு பாதுகாப்பான அரசுக் கட்டடங்களை நியாயமான செலவில் கட்டுவதற்கு தரமான சேவையை பொதுப் பணித் துறை அளித்து வருகிறது. பொதுப் பணித் துறையின் கட்டட வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப வரையறைகள் யாவும் இந்தியத் தர நிர்ணய விதிகளை பின்பற்றியே அமைகின்றன.

## 1.1. துறையின் அமைப்பு – ஒரு கண்ணோட்டம்

பொதுப்பணித்துறை, பல அரசுத் துறைகளுக்கான கட்டடம் சார்ந்த பணியினை மாநிலத்தின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளுவதற்கான, பின்வரும் இணைவகையிலான (Network) அலுவலக அமைப்பைக் கொண்டுள்ளது.

- ❖ சென்னையில் துறைத் தலைவராக ஒரு தலைமைப் பொறியாளர்; கட்டடக்கலை மற்றும் வடிவமைப்பு ஆகிய சிறப்புப் பிரிவுகளில் தலைமைப் பொறியாளருக்கு உறுதுணை புரிவதற்காக தலைமைக் கட்டடக் கலைஞர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் (வடிவமைப்பு).
- ❖ கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களின் தலைமையில் முறையே, 11 வட்டங்கள் மற்றும் 41 கோட்டங்கள்.
- ❖ மின் பணிகளுக்காக கண்காணிப்புப் பொறியாளர்கள் தலைமையில் சென்னை, சேலம் மற்றும் மதுரையில் 3 வட்டங்கள், மின் செயற்பொறியாளர்கள் தலைமையின் கீழ் 7 கோட்டங்கள்.

- ❖ சென்னையில் செயற்பொறியாளரின் தலைமையில் புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் பற்றிய தகவல்கள் சேகரித்து பகிர்ந்து கொள்வதற்காக சிறப்புக் கோட்டம்.

- ❖ சென்னையில் செயற்பொறியாளரின் தலைமையில், மேம்பட்ட தொழில்நுட்ப அறிவினை பொறியாளர்கள் பெறுவதற்காக பயிற்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆராய்ச்சி குறித்த செயல்பாடுகளுக்கான கட்டட ஆராய்ச்சி மையம்.

## 1.2 முக்கிய செயல்பாடுகள்

பொதுப்பணித்துறை, பின்வரும் முக்கிய செயல்பாடுகள் மற்றும் அதன் தொடர்பான செயல்களை நிறைவேற்றி வருகிறது.

- ❖ மாநில அரசின் முதலீட்டு உடைமைகளாக விளங்கும் அரசுக் கட்டடங்களை திட்டமிடுதல், வடிவமைத்தல், கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

- ❖ அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நினைவுச் சின்னங்கள் மற்றும் நினைவிடங்களை கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

- ❖ நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டப் பணிகளை வைப்புத் தொகை பணிகளாக மேற்கொள்ளுதல்.

- ❖ ஆழிப் பேரலை மறு சீரமைப்புப் பணிகள் போன்ற பேரிடர் மறுகட்டுமானப் பணிகளை செயல்படுத்துதல்.

- ❖ பாரம்பரிய கட்டடங்களை புதுப்பித்து புனரமைத்தல்.

❖ மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் மாநில அரசின் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றின் கட்டடப் பணிகளை வைப்புத் தொகை பணிகளாக மேற்கொள்ளுதல்.

❖ கட்டுமான பொருட்கள் மற்றும் கட்டடப்பணி நடைமுறைகள் குறித்த ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ளுதல்.

❖ ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மற்றும் நீதித்துறை போன்ற துறைகளின் கோரிக்கையின் அடிப்படையில் சொத்து மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.

❖ பொதுக் கட்டடங்களுக்கு உறுதிச் சான்றிதழ்கள், அரசு அலுவலகங் களுக்காக வாடகைக்கு எடுக்கப்படும் தனியார் கட்டடங்களுக்கு வாடகை நிர்ணயச் சான்றிதழ்கள் வழங்குதல்.

❖ மிக முக்கியமானவர்கள் மற்றும் மிக மிக முக்கியமானவர்கள் வருகையின்போது அவர்கள் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்தல்.

## 2.0 நிதி ஒதுக்கீடு 2010–2011

2010–2011ம் நிதியாண்டில் கோரிக்கை எண்.39ன் கீழ் ரூ.1202.02 கோடி நிதி ஒதுக்கத்தில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன:–

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | முதலீட்டுக் கணக்கு (திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகள்) | 969.15 |
| 2. | கணக்குகளிடையே மாற்றம் | 82.74 |
| 3. | வருவாய்க் கணக்கு (பராமரிப்பு மற்றும் பணியமைப்பு) | 150.13 |
| | மொத்தம் | 1202.02 |

இவைகளுடன், செலுத்துதல் கணக்குத் தலைப்பில் நபார்டு கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் பள்ளி கட்டடப் பணிகள், உலக வங்கி / மைய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் மருத்துவமனைப் கட்டடப் பணிகள் போன்ற இதர துறை கட்டடப்

பணிகளையும் பொதுப்பணித்துறையின் கட்டட அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

**துறைவாரியான ஒதுக்கீடு – 2010–2011**
**முதலீட்டுக் கணக்கு**

| வ. எண். | துறைகளின் பெயர்கள் | வரவு செலவு 2010–2011 (ரூபாய் கோடியில்) | விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | மக்கள் நல்வாழ்வு | 379.35 | 39.14 |
| 2 | பொதுப்பணி | 366.19 | 37.78 |
| 3 | உள்துறை | 150.82 | 15.56 |
| 4 | வருவாய் | 46.30 | 4.78 |
| 5 | கல்வி | 4.58 | 0.47 |
| 6 | மற்றவை | 21.91 | 2.26 |
| | **மொத்தம்** | **969.15** | **100.00** |

## 3.0 துறைவாரியான பணிகள் 2010–2011

## 3.1 பொதுப்பணித்துறை

### தமிழ்நாடு புதிய சட்டப் பேரவை வளாகம் கட்டுதல்

சென்னையில் உள்ள ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம் கட்டுவதற்காக 12.05.2007 அன்று அறிவித்ததற்கு இணங்க, இவ்வரசு அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டது. இக்கட்டடம் 13.3.2010 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ்வரசு 2009–2010ன் கொள்கை விளக்கக் குறிப்பில் உறுதியளித்தவாறு, 2010–2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, புதிய சட்டப் பேரவையில் 19.3.2010 ல் தாக்கல் செய்துள்ளது.

உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட ஜெர்மானிய கட்டடக்கலை வல்லுநர்களால் இந்த ஏழு மாடிக் கட்டட வரைபடம் தயாரிக்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வளாகத்தில் புதிய சட்டப் பேரவை மற்றும் தலைமைச்செயலக

கட்டடம் தொகுதி – Aவிலும், அதன் பிற துறைகளுக்கான கட்டடம் தொகுதி–Bயிலும் அமைகின்றன. தமிழ்ப் பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றை உள்ளடக்கிய திராவிட கட்டடக்கலை அம்சங்களுடன் சென்னையைப் போன்றதொரு பெருநகரத்துக்குப் பொருத்தமானதாகவும், நம் மாநிலத்திற்கே பெருமை சேர்க்கும் வகையிலும், இக்கட்டடத்தின் வடிவமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

தொகுதி–A யில் அடங்கியுள்ள கட்டட பணிகளுக்காக அரசு ரூ.425.57 கோடிக்கு நிர்வாக ஒப்பளிப்பு அளித்தது. இக்கட்டடத் தொகுப்பு நான்கு வட்டவடிவக் கட்டடங்களாக அமைந்துள்ளது. இக்கட்டடத் தொகுப்பில் உள்ள நான்கு வட்ட கட்டடங்களில் பெரிதாக அமைந்துள்ள முதல் வட்டவடிவ கட்டடமான **“பொதுமக்கள் வளாகமானது”**, பொதுமக்கள் யாவரும் தங்கு தடையின்றி வந்து செல்லும் வகையில் அமைந்துள்ளது. இரண்டாவது பெரிய வட்டவடிவ கட்டடத்தில் சட்டப்பேரவை அமைந்துள்ளது. அதற்கு அடுத்த மூன்றாவது வட்ட வடிவ கட்டடத்தில் நூலகம் உள்ளது. மிகவும் சிறியதான நான்காவது கட்டடத்தில் முதலமைச்சர் அவர்களின் அலுவலகம் இயங்கும்.

இக்கட்டடத் தொகுப்பின் மொத்த பரப்பளவு 86,458 சதுர மீட்டர் ஆகும்.

தரைத் தளத்தில் அமைந்துள்ள சட்டப்பேரவைக் கூடத்தின் மேற்கூரையாக 100 அடி உயரக் குவிமாடம் (dome) ஒன்று அமைக்கப்படுகிறது. தமிழ்நாட்டுத் தேர்வடிவமைப்பு கலையினை பிரதிபலிக்கும் வகையில் 800 டன் எடை கொண்ட குவிமாடம் அமைக்கப்படுகிறது. இதன் கட்டுமானம் எட்டு இரும்பு வளைகம்பங்களில், மெருகேற்றப்பட்ட கருங்கல் பொருத்தப்பட்டு, அலுமினியத் தகடுகளால் இணைக்கப்படுகிறது. இது காற்றின் விசையைத் தாங்கும் வண்ணமும், துருப்பிடிக்காதவாறும் வடிவமைக்கப்படுகிறது. குவிமாடத்தின் அடியில் 12 மீட்டர் விட்டம் கொண்ட சிறப்புக் கண்ணாடி மூலம், பேரவைக் கூடத்தினுள் இயற்கை ஒளி பரவும்.

பசுமைக் கட்டடங்களுக்கு உரித்தான நியதிகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளதால் மிகக்குறைந்த அளவு சுற்றுச்சூழல் பாதிப்பை மட்டுமே ஏற்படுத்தும் வகையில் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மிக அதிக அளவில் இயற்கைக் கதிரொளியை இக்கட்டடம் பெறுவதுடன் ஆற்றல் சேமிக்கும் மின் கருவிகள் மற்றும் விளக்குகளும் இதில்

பொருத்தப்படுகின்றன. இதன் மூலம் மின் ஆற்றலின் பயன்பாடு 20% அளவுக்கு குறையும். வண்ணங்கள், பூச்சுகள், ஒட்டுதல் மற்றும் அடைத்தல் தொடர்பான பொருட்கள் குறை ஆவி கரிமச்சேர்மங்களால் தயாரிக்கப்பட்டவை. இக்கட்டடத்தின் உள்ளே பன்னாட்டு தரங்களின்படி, மிதவெப்ப வசதி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதி முழுவதும் புகையற்ற மண்டலமாக அறிவிக்கப்படுகிறது. எனவே, இவ்வளாகத்தின் உள்ளே காற்றின் தன்மை இதமானதாக இருக்கும். நாட்டுவகைச்செடிகள் மற்றும் புல்வெளிகளுடன் தோட்டமும், நீரூற்றும் நல்ல இனிதான சுற்றுச்சூழலை உருவாக்கும். எனவே, பசுமைக் கட்டடங்களுக்கான **“தங்கத்தரச் சான்றை”** இக்கட்டடம் பெற்றுள்ளது. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றங்களில், இச்சிறப்பை உலகிலேயே முதலாவதாக தமிழ்நாடு சட்டப் பேரவைக் கட்டடம் பெற்றுள்ளது.

தொகுதி – B கட்டட கட்டுமானத்திற்காக, அரசு ரூ.279.56 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இதில், தலைமைச் செயலகத் துறைகள் இயங்குவதற்கான ஏழு கட்டடங்கள் அடங்கும். ஒவ்வொரு கட்டடமும் தரைத்தளத்தின் மேல் ஏழு தளங்கள் கொண்டதாக இருக்கும். இக்கட்டடத் தொகுப்பின் மொத்தப் பரப்பளவு 73,399 சதுர மீட்டர் ஆகும். இந்த ஏழு கட்டடங்களும் இடைவழிகள் மூலம் இணைக்கப்படும். மேலும், தொகுதி – B கட்டடம், இணைப்பு இடைவழிகள் வாயிலாக தொகுதி - A கட்டடத்துடன் இணைக்கப்படும்.

புதிய தலைமைச் செயலகம் மற்றும் சட்டப் பேரவை வளாகத்தைப் பார்வையிட வரும் பொது மக்களுக்கும் மற்றும் அனைத்துத்தரப்பினருக்கும் மேம்படுத்தப்பட்ட வசதிகளை அளித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 3.2 நூலகக் கட்டடப் பணிகள்

### சென்னை கோட்டூர்புரத்தில் “அண்ணா நூற்றாண்டு நூலகக் கட்டடம்” கட்டுதல்

சென்னையில் சர்வதேச தரத்துடன் கூடிய நவீன மாநில நூலகம் ஒன்று கட்டப்படும் என 2007–2008 வரவு–செலவு கூட்டத்தின் போது சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. இப்பணிக்காக, அரசு ரூ.171.78 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

முழுவதும் குளிரூட்டப்பட்ட இக்கட்டடம், தரைதளம் மற்றும் எட்டு தளங்களைக் கொண்டிருக்கும். இக்கட்டடத்தின் மொத்தப்

பரப்பளவு 34,502 சதுரமீட்டர் ஆகும். இந்நூலகக் கட்டடத்தில் தமிழ்மொழி, இதர திராவிட, இந்திய மற்றும் ஆங்கில மொழிகளுக்கான தனித்தனி படிக்கும் கூடங்கள், செய்தித்தாள் / பருவ வெளியீடுகள் பிரிவு, அரசு ஆவணங்கள் பிரிவு, பார்வையற்றோருக்கான தனிப்பிரிவு, சிறுவர் பிரிவு, 200 நபர்கள் அமரக்கூடிய மாநாட்டுக் கூடம், 30 நபர்கள் அமரும் வகையிலான சிறிய மாநாட்டுக்கூடம், இணைய மையம், உணவகம், ஒலி / ஒளிப்பிரிவு, புகைப்பட அரங்கு, மின்னணு நூலகம் மற்றும் நிர்வாகப் பிரிவு முதலியன இடம் பெறுகின்றன. மொத்தம் 11.50 இலட்சம் நூல்கள் வைக்கக்கூடிய வகையில் உள்ள இந்நூலகத்தை, ஒரே நேரத்தில் 1250 நபர்கள் பயன்படுத்த முடியும். 1280 நபர்கள் அமரக்கூடிய அரங்கமொன்றும், அதன்மேல் திறந்தவெளி நாடக அரங்கமும் தனியே அமைக்கப்படுகிறது. இக்கட்டடத்தில் தரைதளம் மற்றும் இரண்டு தளங்கள் உள்ளன. நான்கு மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்குப் போதுமான இட வசதியும் அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் மே 2010ல் முடிவடையும்.

## 3.3 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

### 3.3.1 மருத்துவக்கல்லூரிப் பணிகள்

2009–10 ஆம் ஆண்டு ஒப்புதலளிக்கப்பட்ட, பின்வரும் மருத்துவக்கல்லூரி பணிகளுக்கு நிர்வாக ஒப்பளிப்பு, தொழில் நுட்ப ஒப்புதல் அளித்தல், ஒப்பந்தப் புள்ளிகள் கோருதல் மற்றும் ஒப்பந்ததாரரை முடிவு செய்தல் ஆகிய ஆரம்ப கட்ட நிலையில் பணிகள் உள்ளன.

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1 | சிவகங்கையில் புதிய மருத்துவக் கல்லூரி (கட்டம் I, II, III) | 97.00 | கட்டம் I – பணிகள் தொடங்கி உள்ளன. இலக்கு: ஆகஸ்ட் 2011 கட்டம் II, III – பணிகள் தொடங்கப் படவுள்ளன. |
| 2 | பெரம்பலூரில் புதிய மருத்துவக் கல்லூரி | 97.00 | நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப் படவுள்ளது. |
| 3 | சென்னை மருத்துவ கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டுதல் | 70.20 | நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப் படவுள்ளது. |

முந்தைய ஆண்டுகளில் ஒப்பளிக்கப்பட்ட பின்வரும் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன:–

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1 | திருவாரூரில் புதிய மருத்துவக் கல்லூரி | 92.87 | மருத்துவமனை கட்டடப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.<br>தரை +3 தளங்கள்<br>இலக்கு: ஜூன் 2010.<br>மருத்துவ கல்லூரி கட்டடங்கள் மற்றும் இதர கட்டடங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு: நவம்பர் 2010. |
| 2 | விழுப்புரத்தில் புதிய மருத்துவக் கல்லூரி | 98.81 | புறநோயாளிகளின் பிரிவு மற்றும் நிர்வாக பிரிவு கட்டடங்கள் திறக்கப்பட்டன. இதர கட்டடங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>தரை + 3 தளங்கள்<br>இலக்கு: ஏப்ரல் 2011. |
| 3 | தர்மபுரியில் புதிய மருத்துவக் கல்லூரி<br>(கட்டம் – I & II) | 91.26 | கட்டம் I – பணிகள் முடிவுற்று கட்டடம் திறக்கப்பட்டது.<br>கட்டம் II – பணி களுக்கு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 4 | மதுரையில் ராஜாஜி மருத்துவமனையை விரிவுபடுத்துதல் | 22.06 | பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. |
| 5 | சேலத்தில் மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரியில் புதிய மருத்துவ கட்டடங்கள் கட்டும் பணி | 14.66 | மூன்றாவது தளப்பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>தரை + 4 தளங்கள்<br>இலக்கு: டிசம்பர் 2010. |
| 6 | சென்னை எழும்பூரில் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் சிறப்பு மைய கட்டடம் கட்டும் பணி | 56.32 | பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.<br>தரை + 5 தளங்கள்<br>இலக்கு: ஏப்ரல் 2011. |

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 7 | சென்னை திருவல்லிக்கேணியில் கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் சிறப்பு மைய கட்டடம் கட்டுதல் | 16.65 | பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.<br>தரை +3 தளங்கள்<br>இலக்கு: மார்ச் 2011. |
| 8 | சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் | 13.66 | முதல் தளப் பணிகள் நடைபெற்று வருகின்றன<br>தரை + 2 தளங்கள்<br>இலக்கு: மார்ச் 2011. |
| 9 | சென்னை குழந்தைகள் நல மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் | 13.83 | முதல் தளப்பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>தரை +8 தளங்கள்<br>இலக்கு: ஜனவரி 2011. |
| 10 | சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சை அரங்கு கட்டடம் கட்டுதல் | 9.87 | மூன்றாவது தளப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>தரை +5 தளங்கள்<br>இலக்கு: ஆகஸ்ட் |

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| | | | 2010. |
| 11 | சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனை மற்றும் கல்லூரிக்கு கூடுதல் கட்டடங்கள் (விரிவுரையாளர்கள் கட்டடம், தீவிர சிகிச்சை பிரிவு கட்டடம், இரத்தவங்கி கட்டடம், புற நோயாளிகளுக்கான கட்டடம்) – கட்டம் – II | 16.68 | பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.<br>தரை +3 தளங்கள்<br>இலக்கு: ஆகஸ்ட் 2010. |
| 12 | சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இளங்கலை (250 மாணவர்கள்) மற்றும் முதுகலை (250 மாணவர்கள்) பயிலும் மருத்துவ மாணவர்களுக்கான விடுதி கட்டும் பணி | 14.75 | இரண்டாவது தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.<br>தரை +3 தளங்கள்<br>இலக்கு: அக்டோபர் 2010. |
| 13 | சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி | 41.20 | ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டுள்ளது. |

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| | மற்றும் மருத்துவமனையில் அடுக்குமாடி கட்டடம் கட்டும் பணி (கட்டம் – 2) | | தரை +6 தளங்கள்<br>இலக்கு: ஆகஸ்ட் 2011. |
| 14 | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சைக்கான கட்டடம் கட்டும் பணி | 14.50 | அடித்தளப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>தரை +2 தளங்கள்<br>இலக்கு: ஏப்ரல் 2011. |
| 15 | சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் முதுகலை (140) மாணவியர்களுக்கான விடுதி மற்றும் இதர கட்டடங்கள் கட்டும் பணி | 3.70 | ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டுள்ளது. பணி துவங்கப் படவுள்ளது.<br>தரை +3 தளங்கள்<br>இலக்கு: மார்ச் 2011. |

## 3.3.2 தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டம்

அரசு வட்ட / மாவட்டத் தலைமையிட மருத்துமனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டுதல், விரிவுபடுத்துதல், பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பிக்கும் பணிகள் ;

| பணி | தொகை (ரூபாய் | மொத்த அரசு | பணிகளின் நிலை |
|---|---|---|---|

| | கோடியில்) | மருத்துவ மனைகள் | |
|---|---|---|---|
| கட்டம் –I | 45.62 | 35 | 34 பணிகள் முடிவுற்று ஒப்படைக்கப் பட்டன.<br>1 பணி நடைபெற்று வருகிறது. |
| கட்டம் –II | 196.97 | 191 | 142 பணிகள் முடிவுற்று ஒப்படைக்கப் பட்டன.<br>9 பணிகள் முடிவுற்றன.<br>19 பணிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும்.<br>21 பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| கட்டம் –III | 50.00 | 8 | நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்படவுள்ளது. |

### 3.3.3 மைய அரசு உதவி பெறும் திட்டம் தேசிய ஊரக நல்வாழ்வு சேவை

அனைத்து பணிகளையும் 31.01.2011க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | நிலை |
|---|---|---|---|
| 1 | 75 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தும் பொருட்டு 30 படுக்கை வசதிகளை கொண்ட கட்டடங்கள் கட்டும் பணி | 45.2183 | 55 – பணிகள் முடிவுற்று ஒப்படைக்கப்பட்டன<br>3 – பணிகள் முடிவுற்றன<br>12 – இறுதிகட்ட பணிகள்<br>3 – பணிகள் நடைபெறுகின்றன<br>1 – மறு ஒப்பந்தப்புள்ளி நிலையில்<br>1 – ஒப்பந்தப்புள்ளி ஆய்வு நிலையில் உள்ளது. |
| 2 | 50 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தும் பொருட்டு 30 படுக்கை வசதிகளை கொண்ட கட்டடங்கள் கட்டும் பணி | 31.00 | 7 – பணிகள் முடிவுற்று ஒப்படைக்கப்பட்டன<br>9 – பணிகள் முடிவுற்றன<br>14 – இறுதிகட்ட பணிகள்<br>13 – நடைபெறும் பணிகள்<br>5 – தொடங்கப்படவுள்ளன<br>1 – ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது<br>1 – மாற்றுப் பணியிடம் கண்டயறியப்படவேண்டியுள்ளது |
| 3 | 110 இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் | 23.97 | 6–பணிகள் முடிவுற்றன<br>26 – இறுதிகட்ட பணிகள்<br>50 – பணிகள் நடைபெறுகின்றன |

| வ. எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | நிலை |
|---|---|---|---|
| | கட்டும் பணி | | 10 – தொடங்கப்படவுள்ளன<br>8– ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன<br>10 – மாற்றுப் பணியிடம் கண்டயறியப்படவேண்டியுள்ளது |
| 4 | 20 இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி | 4.42 | 1– பணி முடிவுற்றது<br>7–இறுதிகட்ட பணிகள்<br>9–பணிகள் நடைபெறுகின்றன<br>3–ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது |
| 5 | 2008–2009 ஆண்டுகளில் கைவிடப்பட்ட பணிகளில் 26 பணிகளை மேற்கொள்ளுதல் | 16.8180 | 4–பணிகள் முடிவுற்றன<br>1–இறுதிகட்ட பணி நடைபெறுகிறது<br>12–பணிகள் நடைபெறுகின்றன<br>4 – பணிகள் தொடங்கப்படவுள்ளன<br>5 – ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது |
| 6 | மருத்துவ மற்றும் ஊரக சுகாதார பணிகள் இயக்குநரகம் மூலம் கண்டறியப்பட்ட | 3.87 | 1–பணி முடிவுற்றது<br>3–இறுதிகட்ட பணிகள் நடைபெறுகின்றன<br>5–பணிகள் நடைபெறுகின்றன<br>2 – தொடங்கப்படவுள்ளன. |

| வ. எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | நிலை |
|---|---|---|---|
| | 12 இடங்களுக்கான பணிகள் | | 1 – ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது |
| 7 | தெரிவு செய்யப்பட்ட 45 இடங்களில் கட்டண கழிப்பிடம் கட்டும் பணி. | 2.26 | 5 – பணிகள் முடிவுற்று ஒப்படைக்கப்பட்டன<br>17 – பணிகள் முடிவுற்றன<br>11 – முடிவுறும் நிலையில் உள்ளன<br>8 – பணிகள் நடைபெறுகின்றன<br>2 – தொடங்கப்படவுள்ளன<br>2 – கைவிடப்பட்டன |
| 8 | புதிய 6 ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி | 1.3075 | 3 – பணிகள் நடைபெறுகின்றன<br>3 – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன |

| | | | |
|---|---|---|---|
| 9 | 2009–2010 ஆம் ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 21 இடங்களில் மேம்பாட்டுப் பணிகள் | 0.190670 | 1 – பணி நடைபெற்று வருகின்றது<br>13 – ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன<br>6 – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன<br>1 – பணி கைவிடப்பட்டது |
| 10 | 507 மருத்துவமனைகளில் கூடுதல் வசதிகளை அமைத்து தரும் கட்டடப் பணி | 35.24 | அனைத்துப் பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன. |

15 இடங்களில் ரூ.2.25 கோடி செலவில் பிரசவ அறைகள் கட்டும் பணிகள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

உசிலம்பட்டியில் ரூ.1.12 கோடி செலவில் மகப்பேறு கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.

## 3.4 – உள்துறை

### 3.4.1 – நீதித்துறை

பின்வரும் இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மூன்றடுக்கு கட்டடங்களாகக் கட்டப்பட்டு வருகின்றன:–

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1 | ஆரணி | 3.97 | இறுதிகட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு: ஏப்ரல் 2010 |
| 2 | குடியாத்தம் | 4.40 | பணிகள் முடிவுற்றன. |
| 3 | அருப்புக் கோட்டை | 3.83 | கீழ்த்தளத்தில் தூண்கள் நிறுவும் பணி நடை பெற்று வருகிறது.<br>இலக்கு: மார்ச் 2011 |
| 4 | சிவகங்கை | 7.98 | கடைக்கால் பணி நடைபெற்று வருகிறது.<br>இலக்கு: அக்டோபர்2010 |
| 5 | கடலூர் | 10.02 | கடைக்கால் பணி நடைபெற்று வருகிறது.<br>இலக்கு: அக்டோபர்2010 |

| | | | |
|---|---|---|---|
| 6 | ஈரோடு | 5.42 | கீழ்த்தளத்தில் தூண்கள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.<br>இலக்கு: ஆகஸ்ட் 2010 |
| 7 | பரமக்குடி | 2.40 | முதனிலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு: டிசம்பர் 2010 |
| 8 | கரூர் | 10.00 | இறுதிகட்ட பணி நடைபெற்று வருகிறது<br>இலக்கு: செப்டம்பர் 2010 |
| 9 | அறந்தாங்கி | 3.53 | கடைக்கால் பணி நடைபெற்று வருகிறது<br>இலக்கு: ஆகஸ்ட் 2010 |
| 10 | பூந்தமல்லி | 4.02 | இறுதிக்கட்ட பணி நடைபெற்று வருகிறது.<br>இலக்கு: மே 2010 |
| 11 | ஆலந்தூர் | 4.73 | பணிகள் தொடங்கப்படவுள்ளன<br>இலக்கு: டிசம்பர் 2010 |
| 12 | கும்பகோணம் | 9.97 | மறு ஒப்பந்தப்புள்ளி (மூன்றாவது அழைப்பு) கோரப்பட்டுள்ளது. |
| 13 | நாமக்கல் | 10.56 | இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது<br>இலக்கு: செப்டம்பர் 2010 |
| 14 | தூத்துக்குடி | 8.88 | சன்னல் (Lintel) நிலையில் உள்ளது.<br>இலக்கு : பிப்ரவரி 2011 |
| 15 | உத்தமபாளையம் | 5.17 | ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் குழுவினால் 22.01.2010ல் ஏற்கப்பட்டது.<br>நீதிமன்றம், கட்டடம் கட்டுவதற்கு தடை ஆணைபிறப்பித்துள்ளது. |
| 16 | சங்ககிரி | 5.62 | பணி தொடங்கப்படவுள்ளது |
| 17 | திருமயம் | 1.73 | பணி தொடங்கப்படவுள்ளது |
| 18 | பவானி | 5.27 | பணி தொடங்கப்படவுள்ளது |
| 19 | ஆத்தூர் | 5.67 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 20 | கள்ளக்குறிச்சி | 7.54 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 21 | திருச்செந்தூர் | 2.60 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 22 | ஆம்பூர் | 2.30 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 23 | அரக்கோணம் | 2.82 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 24 | வள்ளியூர் | 4.69 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 25 | பத்மநாபபுரம் | 4.47 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 26 | திருவையாறு | 1.91 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 27 | காங்கேயம் | 2.88 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 28 | தென்காசி | 5.28 | மதிப்பீடு தயாரிப்பு நிலையில் உள்ளது. |
| 29 | பென்னாகரம் | 1.78 | ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது. |
| 30 | குளித்தலை | 4.10 | ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது. |
| 31 | திருச்செங்கோடு | 5.29 | ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. |
| 32 | மேட்டுப்பாளையம் | 2.44 | நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது |
| 33 | ராசிபுரம் | 5.23 | நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது |
| 34 | பழனி | 4.82 | நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது |
| 35 | திருச்சி | 21.82 | நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது |
| 36 | திருவாரூர் | 10.37 | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது |
| 37 | காட்பாடி | 4.21 | நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது |
| 38 | இராணிப்பேட்டை | 2.30 | நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது |
| 39 | குழித்துறை | 6.54 | நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது |
| 40 | சங்கரன்கோவில் | 5.06 | நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது |

திருமயம், மேட்டுப்பாளையம் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் கட்டப்படும் நீதிமன்ற கட்டடங்கள் இரண்டடுக்கு கட்டடங்களாக அமைகின்றன.

ரூ.5.70 கோடி செலவில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கான கட்டடத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்கப் பட்டுள்ளது.

ரூ.24.75 கோடி செலவில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கான 272 குடியிருப்புகள் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்கப் பட்டுள்ளது.

## 3.4.2. சிறைத்துறை

### சிறைகளை நவீனப்படுத்தும் திட்டம்

### 2004–05

ரூ.5.52 கோடி செலவில் ஆத்தூர், கோபி, நாகப்பட்டிணம் ஆகிய இடங்களில் கிளைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக மாற்றுதல் மற்றும் பாளையங்கோட்டை, திருச்சி ஆகிய சிறைச்சாலைகளில் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல் ஆகியவை அடங்கும். இதில், மொத்தமுள்ள 5 பணிகளில், 3 பணிகள் முடிவுற்றன; 2 பணிகள் நடைபெற்று வருகின்றன. இவ்விரண்டு பணிகளும் 30.04.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### 2005–06

ரூ.12.07 கோடி செலவில், விருதுநகர் மற்றும் இராமநாதபுரத்தில் (எஞ்சிய பணிகள்) கிளைச் சிறைகளை மாவட்ட சிறைகளாக மாற்றும் பணி, திருச்சியில் பெண்களுக்கான புதிய சிறை கட்டுமானப் பணி (எஞ்சிய பணிகள்) மற்றும் கோயம்புத்தூர், சேலம், பாளையங்கோட்டை, திருச்சி, புதுக்கோட்டை, வேலூர் ஆகிய மத்திய சிறைச்சாலைகளில் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணி, கழிவு நீர் மற்றும் குடிநீர்க்குழாய் இணைப்பு போன்ற பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டன. மொத்தமுள்ள 72 பணிகளில், 69 பணிகள் முடிவுற்றன; 2 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இவ்விரண்டு பணிகளையும் 31.07.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஒரு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

### 3.4.3. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

### 2008–09

ரூ.2.20 கோடி செலவில், தண்டராம்பட்டு, ஓமலூர், ஆரணி, குத்தாலம், கம்பம், திருத்துறைப்பூண்டி, தக்கலை, மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய 8 இடங்களில் தீயணைப்பு நிலையத்திற்கான கட்டடம் கட்டும் பணிகளில், 6 பணிகள் முடிவுற்று ஒப்படைக்கப் பட்டுள்ளன. எஞ்சியுள்ள 2 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இந்த இரண்டு பணிகளை 31.12.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ரூ.196.63 இலட்சம் செலவில், சங்கராபுரம், திருக்கழுக்குன்றம் குடவாசல், உளுந்தூர் பேட்டை, மற்றும் கூத்தாநல்லூர் ஆகிய ஐந்து இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31.01.2011ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

### 3.4.4. போக்குவரத்துத் துறை

### 2008–09

ரூ.7.135 கோடி செலவில் கடலூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, சங்ககிரி மற்றும் தென்காசி ஆகிய 5 இடங்களில், மண்டல போக்குவரத்து அலுவலகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 5 பணிகளில், 4 பணிகள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன. இப் பணிகளை 30.06.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 1 பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பரிசீலனையில் உள்ளது.

ரூ.1.865 கோடி செலவில், சத்தியமங்கலம், சிதம்பரம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் போக்குவரத்துத் துறையின் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன. இப்பணிகளை 30.04.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி, சங்ககிரி, சிதம்பரம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 4 இடங்களில் சோதனைத்தடம் அமைக்கும் பணிகள்

மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவற்றில் 3 பணிகள் முடிவுற்றுள்ளன. 1 பணியில், மணல் – சரளை கலவை போடப்பட்டுள்ளது. இப்பணிகளை 30.04.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## 2009–2010

ரூ.2.85 கோடி செலவில், இராணிப்பேட்டை மற்றும் செங்கல்பட்டில் மண்டல போக்குவரத்து அலுவலக கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவற்றில், இராணிப்பேட்டை மண்டல போக்குவரத்து அலுவலக கட்டடம் கட்டும் பணிக்கு முன்தகுதி ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு, விலை ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. செங்கல்பட்டு மண்டல போக்குவரத்து அலுவலக கட்டடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

ரூ.2.14 கோடி செலவில், அரூர், இராசிபுரம், திருவில்லிபுத்தூர் மற்றும் வாணியம்பாடி ஆகிய இடங்களில் போக்குவரத்து அலுவலகங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த 4 பணிகளில், 3 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகளை 31.08.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 1 பணிக்கான ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

பொள்ளாச்சி, இராணிப்பேட்டை மற்றும் குடியாத்தம் ஆகிய இடங்களில் ரூ.79.73 இலட்சம் செலவில் சோதனைத்தடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31.05.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## 3.5 வருவாய்த்துறை

## 2007 – 2008

ரூ.15.57 கோடி செலவில், 11 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன. இளுப்பூர், கங்கவல்லி, தொட்டியம், வீரகேரளம்புதூர், குளித்தலை, கல்குளம், பந்தலூர் ஆகிய 7 இடங்களில் பணிகள் முடிவுற்று, கட்டடங்கள் ஒப்படைக்கப்பட்டன. பரமக்குடி, காரியாப்பட்டி ஆகிய 2 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 30.06.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. குந்தாவில் பணி தொடங்கப்படவுள்ளது.

வாழப்பாடியில் பணித்தளம் ஒப்படைக்கும் நிலையில் உள்ளது.

ரூ.25.00 கோடி செலவில் சேலத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. இக்கட்டடம் தரை மற்றும் நான்கு தளங்களைக் கொண்ட கட்டடமாகும். தற்பொழுது நான்காவது தளப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 30.09.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ரூ.1.40 கோடி செலவில், 4 இடங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த 4 பணிகளில், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி ஆகிய 2 இடங்களில் பணிகள் முடிவுற்றன. நாகப்பட்டிணத்தில் நடைபெற்றுவரும் இறுதி கட்ட பணிகளை 30.04.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு பணியான, உதகமண்டலத்தில், மாற்று தளத்தில் கட்டடம் கட்டப்படவுள்ளது.

ரூ.1.19 கோடி செலவில், 7 இடங்களில் வருவாய் கோட்ட அலுவலர் குடியிருப்புகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த 7 பணிகளில், திண்டுக்கல், பழனி, இலால்குடி, ஆத்தூர், திருச்செந்தூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 இடங்களில் பணிகள் முடிவுற்றன. எஞ்சியுள்ள 1 பணியான மதுராந்தகத்தில் அடித்தளப் பணி நடைபெற்று வருகின்றது. இப்பணியை 30.04.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## 2008–09

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1 | தர்மபுரியில் கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம் கட்டுதல் | 2.39 | முடியும் நிலையில் உள்ளது<br>தரை + முதல் தளம்<br>இலக்கு: 30.04.2010 |
| 2 | அரியலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம் கட்டுதல் | 12.88 | முதல் தளப் பணி முடிவுற்றது.<br>தரை + 2 தளம்<br>இலக்கு: 30.09.2010 |
| 3 | திருச்சியில் கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம் கட்டுதல் | 12.01 | முதல் தளப் பணி முடிவுற்றது.<br>தரை +3 தளம்<br>இலக்கு: 30.09.2010 |

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 4 | திருத்தணி, தண்டராம்பட்டு, வேலூர், கடலூர், திட்டக்குடி, திருச்சி, தரங்கம்பாடி, சிவகங்கை, திருப்பத்தூர், ஆத்தூர், உசிலம்பட்டி, சங்கரன்கோவில் ஆகிய 12 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் | 19.21 | 10 – பணிகள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன<br>1 – வரைபடம் ஒப்புதல் பெறவேண்டிய நிலை (உசிலம்பட்டி)<br>1 – ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டுள்ளது. (சிவகங்கை)<br>அனைத்து கட்டடங்களும் தரை + 2 தளங்கள்<br>இலக்கு: 31.08.2010 |
| 5 | 29 வட்டாட்சியர் குடியிருப்புகள் | 4.51 | 8 – பணிகள் முடிவுற்று ஒப்படைக்கப்பட்டன.<br>10 – முடிவுற்றன.<br>5 – இறுதிகட்டப் பணிகள்<br>3 – கூரைமட்டம் |

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| | | | இலக்கு: 30.4.2010<br>3 – பணித்தளம் ஒப்படைக்க வேண்டியுள்ளது |
| 6 | 16 வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் | 1.31 | 4 – பணிகள் முடிவுற்று ஒப்படைக்கப்பட்டன<br>6 – முடிவுற்றன<br>3 – இறுதிகட்ட பணிகள்<br>3 – பணித்தளம் ஒப்படைக்க வேண்டியுள்ளது<br>இலக்கு: ஏப்ரல் 2010 |

## 2009 – 2010

| வ எண் | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரத்தில் | 2.02 | முன்தகுதி ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டுதல் | | |
| 2 | அரியலூரில் சுற்றுலா மாளிகை கட்டுதல் | 1.50 | ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டுள்ளது. |

## 3.6 பள்ளி கல்வித் துறை

### 3.6.1 நபார்டு கடனுதவி திட்டங்கள்

நபார்டு கடனுதவியுடன், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளான கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், பரிசோதனைக் கூடம், குடிநீர் மற்றும் கழிவறை போன்ற இன்றியமையாப் பணிகளை மேற்கொள்ளும் திட்டத்தில், பணி நிலைகள் பின்வருமாறு:—

| கட்டம் | பள்ளிகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) | நிலை |
|---|---|---|---|
| கட்டம் – 6 | 234 | 161.32 | 223 பணிகள் முடிவுற்றன,<br>8 பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு – செப்டம்பர் 2010.<br>1 பணி ஒப்பந்தப்புள்ளி ஆய்வில் உள்ளது.<br>2 பணிகள் கைவிடப்பட்டன. |
| கட்டம் –7 | 195 | 131.69 | 172 பணிகள் முடிவடைந்து ஒப்படைப்பட்டன.<br>8 பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு – 31.10.2010,<br>14 பணிகள் – ஒப்பந்தப்புள்ளிகள் ஆய்வில் உள்ளன.<br>1 பணி கைவிடப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| கட்டம் –8 | 59 | 63.36 | 1 – பணி முடிவுற்றது.<br>51–பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு – டிசம்பர்–2010.<br>7 பணிகள்– ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வில் உள்ளன. |
| கட்டம் – 9 | 362 | 410.74 | 11 பணிகள் முடிவுற்றன.<br>313–பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு – பிப்ரவரி 2011.<br>34 பணிகள் – ஒப்பந்தப்புள்ளிகள் ஆய்வில் உள்ளன.<br>1 பணி – மதிப்பீடு தயாரிக்கப் படுகின்றது.<br>3 பணிகள் – பணிதளம் ஒப்படைக்கப் படவுள்ளது. |
| கட்டம் – 10 | 303 | 247.06 | நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. |
| | | | மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வருகின்றன. |

## 3.7. தமிழ் வளர்ச்சித் துறை

ரூ.50.00 இலட்சம் செலவில் சென்னை எழும்பூரில் தமிழ் வளர்ச்சி வளாகத்தில் ஏற்கெனவே உள்ள கட்டடத்தில் இரண்டாவது தளம் கட்டும் பணி முடிக்கப்பட்டது.

## 3.8 சமூக பாதுகாப்புத் துறை

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் மற்றும் விழுப்புரத்தில், குழந்தைகள் காப்பகம் கட்டும் பணிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது.

## 3.9 சட்டமன்ற உறுப்பினர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள்

ரூ.11.35 கோடி செலவில், 234 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த 234 பணிகளில், 229 பணிகள் முடிவடைந்து ஒப்படைக்கப்பட்டுவிட்டன. 4 இடங்களில் பணித்தளம் ஒப்படைக்கப்பட வேண்டியுள்ளது. எஞ்சியுள்ள 1 பணிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படவுள்ளது.

## 3.10 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

| ஆண்டு | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணியின் நிலை |
|---|---|---|---|
| 2005–2006 | பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவருக்கான 416 விடுதிகள். (ஐம்பது மாணவர்கள் தங்கும் வகையில் இரண்டு மாடி கட்டடம் கட்டுதல்) | 131.04 | 340 பணிகள் முடிவுற்றன. 4 பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. 3 பணிகள் பல்வேறு கட்டுமான நிலையில் உள்ளன. இலக்கு 31.10.2010 69 பணிகள் – ஒப்பந்தம் / ஒப்பந்தப்புள்ளி / மதிப்பீடு / திருத்திய நிர்வாக ஒப்புதல் ஆகிய நிலைகளில் உள்ளன. |
| 2007–2008 | பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான 50 விடுதிகள். (50 மாணவர்களுக்கான இரண்டு மாடிகள் கொண்ட 25 விடுதிகள் மற்றும் 100 மாணவர்களுக்கான மூன்று மாடிகள் கொண்ட 25 விடுதிகள்) | 32.15 | 19 பணிகள் முடிவுற்றன. 10 பணிகள் முடிவு பெறும் நிலையில் உள்ளன. 8 பணிகள் நடைபெற்று வருகின்றன. இலக்கு – 30.11. 2010. 13 பணிகள் ஒப்பந்தம் / ஒப்பந்தப்புள்ளி / மதிப்பீடு / திருத்திய நிர்வாக ஒப்புதல் ஆகிய நிலைகளில் உள்ளன. |

| ஆண்டு | பணி | தொகை (ரூபாய் கோடியில்) | பணியின் நிலை |
|---|---|---|---|
| 2008–2009 | பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கான 25 விடுதிகள் கட்டுதல் (50 மாணவர் களுக்கான 2 மாடி கட்டடங்கள்) | 13.68 | 1 பணி – முடிவுற்றது.<br>16 பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இலக்கு – 31.12.2010.<br>7 பணிகள் – ஒப்பந்தம் / ஒப்பந்தப்புள்ளி / மதிப்பீடு / திருத்திய நிர்வாக ஒப்புதல் ஆகிய நிலைகளில் உள்ளன.<br>1 பணி – பணித்தளம் ஒப்படைப்பு செய்ய வேண்டியுள்ளது. |
| 2009–2010 | பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப் பட்ட / சீர்மரபினரைச் சார்ந்த மாணவருக்கான 25 விடுதிகள் (50 மாணவர் களுக்கான 2 மாடி கட்டடங்கள்) | 12.50 | மதிப்பீடுகள் தயாரிக்கப் படுகின்றன. |

## 3.11 சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

### 2009–2010

ரூ.3.66 கோடி செலவில், மாமல்லபுரத்தில் பேருந்து நிறுத்தம் கட்டும் பணிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட வேண்டியுள்ளது.

ரூ.92.92 இலட்சம் செலவில், காஞ்சிபுரம், மதுரை மற்றும் திருநெல்வேலியில் கலை மற்றும் பண்பாட்டு மையம் கட்டும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளன.

## 3.12 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

ரூ.3.05 கோடி செலவில், தஞ்சாவூர், உதகமண்டலம் மற்றும் ஒசூர் ஆகிய 3 இடங்களில் 5 கால்நடை பராமரிப்பு மையங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த 5 பணிகளில், 3 பணிகள் முடிவுற்றன. எஞ்சியுள்ள 2 பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31.12.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### மைய அரசு உதவி பெறும் திட்டம்

ரூ.64.50 இலட்சம் செலவில், காட்டுப்பாக்கம், அபிசேகபட்டி ஆகிய இரண்டு இடங்களில் கோழிப் பண்ணைகள் அமைக்கும் பணிகள் மற்றும் ரூ.68.18 இலட்சம் செலவில் அபிசேகபட்டி, திருவேம்பலாபுரம் ஆகிய இரண்டு இடங்களில் கட்டட மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் 1 பணி சன்னல் மட்டத்தில் உள்ளது. இப்பணியை, 31.12.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்று பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன.

## 3.13 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (TASMAC)

ரூ.1.425 கோடி செலவில், பொள்ளாச்சி வட்டம் எ.சங்கம்பாளையத்தில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துக்கான கிடங்கு மற்றும் அலுவலகம் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணியினை 31.03.2011ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 3.14 பதிவுத்துறை

### 2005–2006

ரூ.1.50 கோடி செலவில், ஆரணி, காயல்பட்டினம், கடலூர், சத்தியமங்கலம், வேர்கிளம்பி, செய்யூர், இராமேஸ்வரம், திருப்போரூர், திருவள்ளூர் மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய 10 இடங்களில் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகளில், 9 பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சிய 1 பணி முடியும் தருவாயில் உள்ளது.

## 2009–2010

ரூ.7.10 கோடி செலவில், 5 இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த 5 பணிகளில், திருநெல்வேலி, நாகர்கோவில், தூத்துக்குடி ஆகிய இடங்களில் பணிகள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன. மதுரை, கடலூர் ஆகிய 2 இடங்களில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இப்பணிகளை 28.2.2011ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## 3.15 அவசரகால ஆழிப் பேரலை மறு சீரமைப்புத் திட்டம்

ரூ.40.13 கோடி செலவில், ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட பொதுப்பணி, வருவாய், கால்நடை பராமரிப்பு, சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளுக்கான கட்டடங்களை பராமரித்தல், புதுப்பித்தல், மேம்படுத்துதல் மற்றும் மறு கட்டுமானம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மொத்தமுள்ள 340 பணிகளில், 338 பணிகள் நிறை வடைந்துள்ளன. 1 பணி நடைபெற்று வருகின்றது. இப்பணியை 31.5.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது, எஞ்சிய 1 பணி நீதிமன்ற வழக்கினால் நிறுத்தப்பட்டுள்ளது.

## 3.16 தொல்லியல் துறை

## 2007–08

ரூ.1.87 கோடி செலவில், 13 கோவில்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த 13 பணிகளில், 10 புனரமைப்புப்பணிகள் முடிவுற்றன. 3 பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. 22 இடங்களில் எனாமல் பாதுகாப்பு அறிவிப்புப்பலகை அமைக்கும் பணி, தொல்லியல் துறையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2008–2009

ரூ.1.99 கோடி செலவில், 15 கோவில்களில் புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த 15 பணிகளில், 11 பணிகள் முடிவுற்றன. 3 பணிகள் நடைபெற்று வருகின்றன. 1 பணி முடிவுறும் நிலையில் உள்ளது. இப்பணிகளை 30.9.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## 2009–2010

ரூ.77.80 இலட்சம் செலவில், 10 கோயில்களில் புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த 10 பணிகளில், 6 பணிகள் முடிவுற்றன. 4 பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 31.12.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 3.17 இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

## 2009–2010

ரூ.1.19 கோடி செலவில், திருவொற்றியூர், திருவள்ளூர், விருதுநகர், விழுப்புரம், தர்மபுரி ஆகிய 5 இடங்களில் சிலை தயாரிப்பு மையங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அனைத்துப் பணிகளும் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன. இப்பணிகளை 31.12.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 3.18 வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## 2009–2010

ரூ.1.386 கோடி செலவில், நாகப்பட்டிணம் மாவட்டம், திருக்குவளையில் தொழிற்பயிற்சி நிலையத்திற்கான பணி மேற்கொள்ளப்பட்டு தற்போது அடித்தளம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளது. இப்பணியை 31.12.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ரூ.46.00 இலட்சம் செலவில், தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரத்தில் தொழிற்பயிற்சி நிலையத்திற்கான கட்டடங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணி தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. இப்பணியை 31.5.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

மேலும், பின்வரும் இடங்களிலுள்ள தொழிற்பயிற்சி நிலைய கட்டடங்களை புதுப்பித்தல் மற்றும் நிலை உயர்த்துதல் போன்ற பணிகள் துவங்கப்பட்டுள்ளன:–

| வ. எண் | இடம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கிண்டி | 96.25 |
| 2 | வேலூர் | 95.18 |
| 3 | மதுரை | 96.55 |
| 4 | பேட்டை (திருநெல்வேலி) | 96.30 |
| 5 | கிண்டி (ஆண்கள்) | 100.00 |
| 6 | செங்கல்பட்டு | 100.00 |
| 7 | கடலூர் | 100.00 |
| 8 | கோயம்புத்தூர் | 100.00 |
| 9 | மதுரை | 100.00 |
| 10 | தர்மபுரி | 87.50 |
| 11 | தாராபுரம் (திருப்பூர்) | 87.50 |

அனைத்துப் பணிகளையும் 30.9.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 3.19 வேளாண்மைத் துறை

ரூ.11.25 கோடி செலவில், 95 இடங்களில் விதை சேமிப்பு கிடங்கு கட்டும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

## 3.20 பொது (மறுவாழ்வு)த்துறை

இந்த அரசின் அறிவிப்பைத் தொடர்ந்து, இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம்களில் குடிநீர் வசதி, கழிவுநீர் அகற்றல் வசதி, மின் வசதி போன்ற அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பணிகள் ரூ.37.33 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. இப்பணிகளை 30.4.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## 4.0 பொதுப்பணித்துறை பகுதி II திட்டங்கள்

## 4.1 – 2009–2010

பின்வரும் பகுதி 2 திட்டங்கள் 2009–2010 ஆண்டில் துவங்கப்பட்டன:–

| வ. எண் | பணி | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 1 | வேலூர் மாவட்டம் ஏலகிரியில் இரண்டு அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டுதல். | 40.00 | அடித்தளப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |

| வ. எண் | பணி | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | பணிகளின் நிலை |
|---|---|---|---|
| 2 | வேலூரில் 4 தங்கும் அறைகள் கொண்ட சுற்றுலா மாளிகை கட்டுதல் | 55.00 | அடித்தளப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3 | தலைமைப் பொறியாளர் (கட்டடம்), கட்டட அமைப்பு அலுவலகத்தில் கணினி, யு.பி.எஸ், ஸ்கேனர், பிரிண்டர் வாங்குதல். | 15.00 | கணினிகள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. |
| 4 | கட்டட கட்டுமான வட்டம், கட்டட அமைப்பு பொதுப் பணித்துறையில் 13 ஒளி நகல் இயந்திரங்கள் வாங்குதல். | 7.00 | இயந்திரங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. |
| 5 | இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியில் 2அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டடங்கள் கட்டுதல். | 23.00 | அடித்தளப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 6 | சென்னையில் கொதிகலன்கள் இயக்குநரக அலுவலகத்திற்கு கணினி, யு.பி.எஸ். ஸ்கேனர், பிரிண்டர் வாங்குவது. | 5.51 | கணினிகள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. |
| 7 | திருநெல்வேலியில், 4 தனி அறைகள் கொண்ட சுற்றுலா மாளிகை கட்டுதல் | 55.00 | அடித்தளப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 8 | கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில், 2 அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டுதல் | 23.00 | அடித்தளப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| 9 | திண்டுக்கல் மாவட்டம் பழனியில் 2 அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டுதல். | 23.00 | பணிகள் சன்னல் மட்டத்தில் உள்ளன. |
| 10 | கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத் தில் உதவி பொறியாளர்களுக்கு 2 குடியிருப்புகள் கட்டுதல் | 19.49 | பணிகள் சன்னல் மட்டத்தில் உள்ளன. |

இப்பணிகளை 31.8.2010ல் முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 4.2 2010–2011

பின்வரும் பகுதி 2 திட்டங்கள் 2010 – 2011ம் ஆண்டில் செயலாக்கப்படவுள்ளன:–

| வ. எண். | பணிகளின் பெயர் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர்நகர் அரசு அலுவலர் குடியிருப்பு வளாகத்தில் கட்டப்பட்டு வரும் 126 குடியிருப்புகளுக்கு கூடுதலாக 3 மின் தூக்கி அமைக்கும் பணி. | 60.00 |
| 2 | சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர்நகர் அரசு அலுவலர் குடியிருப்பு வளாகத்திற்கு சுற்றுச்சுவர் மேம்படுத்தும் பணி | 12.50 |
| 3 | சென்னை, தண்டையார்பேட்டையில் உள்ள அச்சக தொழிலாளர் குடியிருப்பிற்கு பாதுகாப்பு சுவர் சிறப்பு சீரமைப்புப் பணி | 12.25 |
| 4 | சேலம், கட்டட கட்டுமான மற்றும் பராமரிப்பு வட்ட கண்காணிப்புப் பொறியாளருக்கு குடியிருப்பு கட்டும் பணி | 24.00 |
| 5 | திருவாரூர் மாவட்டம், திருவாரூரில் 5 அறைகளுடன் கூடிய கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணி | 70.00 |
| 6 | திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில், 2 அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை கட்டும் பணி | 23.00 |
| 7 | பொதுப்பணித்துறை, கட்டட அமைப்பில் உள்ள 13 | 55.25 |

| வ. எண். | பணிகளின் பெயர் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு மாற்றீடு வகையில் புதிய சீரூந்துகள் கொள்முதல் செய்தல் | |
| 8 | திருச்சி, புதிய சுற்றுலா மாளிகைக்கு 62.5 கே.வி.ஏ திறன் கொண்ட ஒரு டீசல் மின்னாக்கி அமைக்கும் பணி | 11.90 |
| 9 | பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பில் கட்டட கலைஞர்களுக்கு (12 நபர்கள்), ரெவிட் ஆர்க்கிடெக்சர் அல்லது அதற்கு இணையான பொருளில் பயிற்சி அளித்தல். | 0.95 |
| | மொத்தம் | 269.,85 |

## 5. பெரும் கட்டடப்பணிகள் – ஒரு பார்வை

### 5.1 முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| வ. எண். | பணியின் பெயர் | தொகை (ரூபாய் கோடியில்) | இலக்கு |
|---|---|---|---|
| 1 | சென்னையில் புதிய தலைமைச் செயலகக் கட்டடம் (தொகுதி – பி) | 279.56 | மே 2011 |
| 2 | சென்னை கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நூலகம் | 171.78 | மே 2010 |
| 3 | சென்னை பல்மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் | 13.66 | மார்ச் 2011 |
| 4 | சென்னை எழும்பூர் மகப்பேறு குழந்தை நல மருத்துவ மனையில் அடுக்குமாடி கட்டடம் | 56.32 | ஏப்ரல் 2011 |
| 5 | சென்னை திருவல்லிகேணி கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் சமூக குழந்தை நல நிறுவன சிறப்பு கட்டடம் | 16.65 | மார்ச் 2011 |

| வ. எண். | பணியின் பெயர் | தொகை (ரூபாய் கோடியில்) | இலக்கு |
|---|---|---|---|
| | (அடுக்கு மாடி) | | |
| 6 | செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் அறுவை சிகிச்சை கட்டடம் | 14.50 | ஏப்ரல் 2011 |
| 7 | விழுப்புரத்தில் புதிய மருத்துவ கல்லூரி கட்டடங்கள் | 98.81 | ஏப்ரல் 2011 |
| 8 | திருவாரூரில் புதிய மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் | 92.87 | நவம்பர் 2010 |
| 9 | நபார்டு கடனுதவியுடன் 59 பள்ளி கட்டடங்கள் ( கட்டம் – 8 ) | 63.36 | ஜூன் 2010 |
| 10 | நபார்டு கடனுதவியுடன் 362 பள்ளி கட்டடங்கள் (கட்டம் – 9) | 410.74 | டிசம்பர் 2010 |
| 11 | அருப்புக்கோட்டை, சிவகங்கை, கடலூர், ஈரோடு, பரமக்குடி, அறந்தாங்கி, பூந்தமல்லி, தூத்துக்குடி, ஆலந்தூர், உத்தமபாளையம் ஆகிய | 55.98 | மார்ச், 2011 |

| வ. எண். | பணியின் பெயர் | தொகை (ரூபாய் கோடியில்) | இலக்கு |
|---|---|---|---|
| | இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்கள் | | |
| 12 | சேலத்தில், புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம் | 25.00 | செப்டம்பர் 2010 |
| 13 | அரியலூரில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம் | 12.88 | செப்டம்பர் 2010 |
| 14 | திருச்சியில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம் | 12.01 | நவம்பர் 2010 |
| | **மொத்தம்** | **1324.12** | |

## 5.2 எடுத்துக்கொள்ளப்படவுள்ள பணிகள்

| வ.எண். | பணிகளின் பெயர் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | சென்னை மருத்துவக் கல்லூரிக்கு புதிய கட்டடம் | 70.20 |

| வ.எண். | பணிகளின் பெயர் | தொகை (ரூபாய் கோடியில்) |
| --- | --- | --- |
| 2 | சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அடுக்குமாடி கட்டடம் (கட்டம் – 2) | 41.20 |
| 3 | சிவகங்கையில் புதிய மருத்துவ கல்லூரி கட்டடம் | 97.00 |
| 4 | பெரம்பலூரில் புதிய மருத்துவ கல்லூரி கட்டடம் | 97.00 |
| 5 | தர்மபுரியில் புதிய மருத்துவக் கல்லூரி கட்டடம் (கட்டம் – 2) | 43.68 |
| 6 | நபார்டு கடனுதவியுடன் 303 பள்ளி கட்டடங்கள் (கட்டம் – 10) | 247.06 |
| 7 | சென்னை நந்தனம் வேளாண்மை பொறியியல் துறை வளாகத்தில் பன்முக திட்ட அலுவலகத்தில் (MDPU) அடுக்கு மாடி கட்டும் பணி | 15.00 |
| 8 | கும்பகோணம், சங்ககிரி, திருமயம், பவானி, ஆத்தூர், கள்ளக்குறிச்சி, திருச்செந்தூர், ஆம்பூர், அரக்கோணம், வள்ளியூர், திருவையாறு, காங்கேயம், தென்காசி, பென்னாகரம், குளித்தலை, திருச்செங்கோடு, மேட்டுப்பாளையம், இராசிபுரம், பழனி, திருச்சி, திருவாரூர், காட்பாடி, இராணிப்பேட்டை, குழித்துறை, சங்கரன்கோயில் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்கள் கட்டுதல். | 136.00 |
| 9 | தமிழ்நாடு சுகாதார நலத்திட்டம்(TNHSP) (கட்டடம் III) | 50.00 |
| | **மொத்தம்** | **797.14** |

**மு. கருணாநிதி**
முதலமைச்சர்